# மயிலாடுதுறை நகராட்சி

**2019–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 30–ஆம் தேதி திங்கள் கிழமை**
**மாலை 3.30 மணிக்கு நடைபெற்ற சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்.**
**முன்னிலை:– திரு. சோ. புவனேஸ்வரன் (எ) அண்ணாமலை.,**
**தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையர்**
**மயிலாடுதுறை நகராட்சி**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள் | தீர்மானம் |
|---|---|---|
| **30.12.2019** | 1)மயிலாடுதுறை நகராட்சி ஆணையரின் 2019–ம் ஆண்டு டிசம்பர் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்.677** பதிவு செய்யப்பட்டது. |
| **30.12.2019** | 2) மயிலாடுதுறை நகராட்சி பொறியாளர் 2019–ம் ஆண்டு டிசம்பர் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்.678** பதிவு செய்யப்பட்டது. |
| **30.12.2019** | 3)மயிலாடுதுறை நகராட்சி நகர்நல அலுவலர் 2019–ம் ஆண்டு டிசம்பர் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்.679** பதிவு செய்யப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 30.12.2019 | 4)மயிலாடுதுறை நகராட்சி பொது நிதி 2019–2020ன்கீழ் கீழ்கண்ட பணியினை செய்திட 27.11.2019 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. | தீர்மான எண்.680<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது |

| வ எண் | உபகரணங்கள் விபரம் | விலை மதிப்பு ரூ. | (ஒரு கணிணி, ஒரு பிரிண்டர்களுக்கான) விலைப்புள்ளி அளித்துள்ள மூன்று நிறுவனத்தாரர்கள் பெயர் திருவாளர்கள் | குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தாரர் பெயர் திருவாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| பொது நிதி 2019–2020 | | | | |
| 1. | மயிலாடுதுறை நகராட்சி பொது பிரிவின் பயன்பாட்டில் உள்ள பழுதடைந்துள்ள 2 எண்ணிக்கை கணிப்பொறி மற்றும் 3 எண்ணிக்கை பிரிண்டர்கள் பழுது நீக்கம் செய்யும் பணி. | 50,000/- | **MAS Computers, Mayiladuthurai. Rs. 19600/-** | **MAS Computers, No.4 Nadar Complex, Mayiladuthurai.** |
| | | | **AM computers, Mayiladuthurai. Rs.21500/-** | |
| | | | **MAM Computers, Mayiladuthurai. Rs.21300/-** | |

மேற்கண்டவாறு பட்டியலில் கண்டுள்ள கலம் எண்: 5ல் குறிப்பிட்டுள்ள குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தாரரின் விலைப்புள்ளியினை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்படி பணியின் அவசர அவசியம் கருதியும், நிர்வாக நலன்கருதியும் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி மன்றத் தலைவர் / தனி அலுவலரின் முன் அனுமதியுடன் வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.** 5166/2019/அ1

**30.12.2019**

5)மயிலாடுதுறை நகராட்சி குடிநீர் திட்ட நிதியின்கீழ் கீழ்கண்ட பணியினை செய்திட 30.10.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை தனிஅலுவலரின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | ஒப்பந்த மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இரண்டு ஒப்பந்ததாரர்கள் பெயர் திருவாளர்கள் | மதிப்பீட்டைவிட குறைவு/ மதிப்பீட்டைவிட அதிகம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| குடிநீர் திட்ட நிதி 2019-20 | | | | | |
| 1. | இந்நகராட்சி பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள மினிபவர் பம்பு, இந்தியா மார்க் II பம்புகள் மற்றும் கைப்பம்புகள் பழுதுபார்க்கும் பணி (ஜுன் 2019 முதல் மே 2020 வரை) | **9,50,000 /-** | திரு. E. கண்ணன், மயிலாடுதுறை. | ரூ. 802754.00/– (–) 0.012% குறைவு | திரு. E. கண்ணன், மயிலாடுதுறை. |
| | | | திரு. K. செந்தில், மயிலாடுதுறை. | ரூ.803982.00/– (+)0.141% அதிகம் | |

அலுவலககுறிப்பு

பட்டியலில் கண்டுள்ள கலம் எண்: 6ல் குறிப்பிட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்தாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**ந.க.எண். 3439/2019/இ1**

**தீர்மான எண்.681**

அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| **30.12.2019** | 6) மயிலாடுதுறை நகராட்சியில் 2017–2018–ம் ஆண்டுக்குரிய உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை உதவி இயக்குனர், நாகப்பட்டினம் அவர்கள் தணிக்கை மேற்கொண்டதில் தணிக்கை கட்டணமாக ரூ.86500/– செலுத்த வேண்டி 2017–2018–ம் ஆண்டுக்கு தணிக்கை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனவே 2017–2018 ஆம் ஆண்டுக்கு தணிக்கை கட்டணமாக ரூ.86500/– அரசு நகராட்சி நிதியிலிருந்து செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.9643/2014/பி4 | **தீர்மான எண்.682**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| **30.12.2019** | 7) இந்நகராட்சி அனைத்து பணிகளும் இணையதளம் வாயிலாக நடைபெறுவதால் BSNL மூலம் பெறப்பட்ட Broadband connection மிகவும் மெதுவாக ஆக உள்ளதால் பணிகள் விரைவாக முடிக்க இயலாத சூழ்நிலை உள்ளது. எனவே தற்பொழுது BSNL நிறுவனத்தின் மூலம் Optical Fibar cable இணையதள இணைப்பு இரண்டு எண்ணிக்கை மற்றும் அதற்கு தேவையான இரண்டு மோட்டார் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவீனத்தொகை ரூ.15,000/– (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) ஆகும். இதனை இந்நகராட்சியின் பொது நிதி 2019–20 இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.**5529/2019**/இ1. | **தீர்மான எண்.683**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| **30.12.2019** | 8) இந்நகராட்சி பொறியியல் பிரிவு பராமரிப்பில் உள்ள TN.82.A.0658 ஆணையர் ஈப்பு வாகனத்தின் மின்கலப்பெட்டி செல் பழுதடைந்து வாகனம் இயக்குவதற்கு மிகவும் சிரமமாக உள்ளதால், அதனை மாற்றி புதிய மின்கலப்பெட்டி வாங்கி பொருத்துவதற்கு செலவினத் தொகை ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) ஆகும். இதனை குடிநீர் திட்ட நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>**அலுவலககுறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி விலைப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 5115/2019/இ1 | **தீர்மான எண். 684**<br>**அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr>
<td>30.12.2019</td>
<td>

9)மயிலாடுதுறை நகராட்சி Capital Grant Fund 2019-20 நிதியின்கீழ் கீழ்கண்ட பணியினை செய்திட 03.12.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை தனிஅலுவலரின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

<table>
<tr><th>வ. எ ண்</th><th>வேலையின் விபரம்</th><th>ஒப்பந்த மதிப்பு ரூ.</th><th>ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இரண்டு ஒப்பந்ததாரர்க ள் பெயர் திருவாளர்கள்</th><th>மதிப்பீட்டைவிட குறைவு/ மதிப்பீட்டைவிட அதிகம்</th><th>குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள்</th></tr>
<tr><td>1</td><td>2</td><td>3</td><td>4</td><td>5</td><td>6</td></tr>
<tr><td colspan="6">Capitals Grant Fund 2019-20</td></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">வார்டு எண்.10, திருமஞ்சன வீதியில் காவேரி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் பணி.</td><td rowspan="2">18,00,000/-</td><td>திரு. K. செந்தில், மயிலாடுதுறை.</td><td>ரூ. 1498761.93/– (–) 0.506% குறைவு</td><td rowspan="2">திரு. K. செந்தில், மயிலாடுதுறை.</td></tr>
<tr><td>திரு. E. கண்ணன், மயிலாடுதுறை.</td><td>ரூ. 1508690.93/– (+)0.153% அதிகம்</td></tr>
</table>

<u>அலுவலககுறிப்பு :</u> பட்டியலில் கண்டுள்ள கலம் எண்: 6ல் குறிப்பிட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்தாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்

**ந.க.எண்.** 5133/2018/இ1

</td>
<td>

**தீர்மான எண். 685**

அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

</td>
</tr>
<tr>
<td>30.12.2019</td>
<td>

10) இந்நகராட்சி பொறியியல் பிரிவு பராமரிப்பில் உள்ள TN.51.T.7645 என்ற எண்ணுள்ள ஈப்பு வாகனத்தில் அடிக்கடி பழுது ஏற்பட்டு, வாகனம் இயக்குவதற்கு சிரமமாக உள்ளது. அதனை சீர்செய்ய ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்). இதனை குடிநீர் திட்ட நிதி 2019-20ல் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலககுறிப்பு: அனுமதிக்கலாம்.

ந.க.எண். 5484/2019/இ1

</td>
<td>

**தீர்மான எண்.686**

அனுமதிக்கப்பட்டது

</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>30.12.2019</td>
<td>11) மயிலாடுதுறை நகராட்சி அம்மா உணவகத்தின் மேற்கூரை, Plastering, Paintng, Flooring, Tiles, Window,Door ஆகியவற்றில் பழுது நீக்கப் பணிகள் மேற்கொள்ள தேவையான மதிப்பீடு தொகை ரூ.2,00,000/- (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்)ஆகும். இதனை இந்நகராட்சியின் வருவாய் நிதி 2019-20ல் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br><br>அலுவலககுறிப்பு: அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண். 5659 /2019/இ1</td>
<td>தீர்மான எண்.687<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>30.12.2019</td>
<td>12)மயிலாடுதுறை நகராட்சி பொது நிதி 2019-20-ன்கீழ் கீழ்கண்ட பணியினை செய்திட 24.12.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை தனிஅலுவலரின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எ ண்</th><th>வேலையின் விபரம்</th><th>ஒப்பந்த மதிப்பு ரூ.</th><th>ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இரண்டு ஒப்பந்ததாரர்கள் பெயர் திருவாளர்கள்</th><th>மதிப்பீட் டைவிட குறைவு/ மதிப்பீட் டைவிட அதிகம்</th><th>குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள்</th></tr>
<tr><td>1</td><td>2</td><td>3</td><td>4</td><td>5</td><td>6</td></tr>
<tr><td colspan="6">ே பொது நிதி 2019-20</td></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">மயிலாடுதுறை நகராட்சி புதிய அலுவலக கட்டிடத்தின் முதல் தளத்திற்கு Weathering course மற்றும் Partition அமைக்கும் பணி.</td><td rowspan="2">25,00,000/-</td><td>M/s MSR Associates, மயிலாடுதுறை.</td><td>ரூ. 19,82,081.53 (–) 0.01% குறைவு</td><td rowspan="2">M/s MSR Associates, மயிலாடுதுறை.</td></tr>
<tr><td>திரு. L. ராஜேஸ்வரன், மயிலாடுதுறை.</td><td>ரூ. 21,82,839.36 (+)10.12 % அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலககுறிப்பு</u> : பட்டியலில் கண்டுள்ள கலம் எண்: 6ல் குறிப்பிட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்தாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.<br><br>ந.க.எண். 5071 /2019/இ1</td>
<td>தீர்மான எண்.688<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 30.12.2019 | 13) மயிலாடுதுறை நகராட்சிக்கு குடிநீர் கொண்டுவரப்படும் முடிகண்டநல்லூர் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து நகராட்சியின் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளுக்கு வரும் பிரதான குழாய்களில் ஏற்படும் உடைப்புகளினால் குடிநீர் வெளியாகி வீணாகி வருகிறது. இதேபோல் ஒன்பது இடங்களில் உடைப்பு ஏற்பட்டு குடிநீர் வீணாகி வருகிறது. மேற்படி பணியினை உடனடியாக சீர்செய்திட தேவையான மதிப்பீட்டு தொகை ரூ.2,50,000/- (ரூபாய் இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) ஆகும். இதனை இந்நகராட்சியின் குடிநீர் திட்ட நிதி 2019-20 இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண். 5383 /2019/இ1 | தீர்மான எண்.689<br>அனுமதிக்கப்பட்டது |
| 30.12.2019 | 14)இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள கீழ்கண்ட வாகனங்களுக்கு 08.12.2019 உடன் இன்சூரன்ஸ் முடிவடைவதால் அதை ஒராண்டு காலத்திற்கு புதுப்பிக்க வேண்டியுள்ளதால் அதற்காகும் செலவீனத் தொகை ரூ.1,08,249/- (ரூபாய் ஒரு இலட்சத்து எட்டாயிரத்து இருநூற்று நாற்பத்தி ஒன்பது மட்டும்) ஆகும். இதனை இந்நகராட்சியின் குடிநீர் திட்ட நிதி 2019-20 இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>(அட்டவணை கீழே)<br><br>அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண். 5205/2019/இ1 | தீர்மான எண்.690<br>அனுமதிக்கப்பட்டது |

| வ.எண் | வாகன எண் | தொகை |
|---|---|---|
| 1 | TN-82-A-0658 | 18299/- |
| 2 | TN-51-S-1077 | 11383/- |
| 3 | TN-51-C-3108 | 41215/- |
| 4 | TN-51-K-5337 | 37352/- |

| | | |
|---|---|---|
| **30.12.2019** | 15)இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு டிராக்டர் டிரைலர் வாகனம் எண்.TN.51.P.3556, 3558–க்கான தகுதிச்சான், 31.10.2019 அன்றுடன் முடிவடைவதாகவும், தகுதிச்சான்று புதுப்பிக்க கீழ்க்கண்ட பழுது நீக்கம் செய்யப்பட வேண்டும் என வாகன ஓட்டுனராக பணிபுரியும் திரு. N. முரளி (பிட்டர்) தனது 15.10.2019ந் தேதிய விண்ணப்பத்தில் தெரிவித்துள்ளார். | **தீர்மான எண்.691**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| வ. எண். | பழுதுகள் விபரம் |
|---|---|
| 1. | ரேடியேட்டர் சர்வீஸ் |
| 2. | கிளர்ச்சி பிளேட் கவர் அசெம்ளி, ரிவர்ஸ்பேரிங் மாற்றுதல் |
| 3. | ஸ்டேரிங் எண்ட் மாற்றுதல் (பவர் ஸ்டேரிங்) |
| 4. | பிரேக் பெடல் புஷ் மாற்றுதல் |
| 5. | கிளர்ச்சி க் பெடல் புஷ் மாற்றுதல் |
| 6. | பிரண்ட் வீல் பேரிங் 4 ( L&R) புதியதாக மாற்றுதல் |
| 7. | டிங்கரிங் ஒர்க்ஸ் |
| 8. | கம்ளீட் பெயிண்டிங் மற்றும் எழுத்து வேலை |
| 9. | ஹைட்ராலிக் ஹோஸ்பைப் மற்றும் ஹோஸ் புதியதாக மாற்றுதல் |
| 10. | எலக்ரிக் செக்கப் |
| 11. | டைனமோ மற்றும் செல்ப் மோட்டார் சர்வீஸ் |
| 12 | டிரைய்லர் வீல் பேரிங் 4 பேரிங் 4 ஆயில் மாற்றுதல் |
| 13. | டிரைலர் புதிய ஊக்கு மாற்றுதல் |

மேற்கண்டவாறு பழுது நீக்கம் செய்து தகுதிச்சான்று புதுப்பிக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.85000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: : மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 4613/2019/எச்3

| | | |
|---|---|---|
| **30.12.2019** | **16)**இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு டிப்பர் லாரி வாகனம் எண்.TN.51.S.**5146–**க்கான தகுதிச்சான்று **22.10.2019** அன்றுடன் முடிவடைவதாகவும், தகுதிச்சான்று புதுப்பிக்க கீழ்க்கண்ட பழுது நீக்கம் செய்யப்பட வேண்டும் என வாகன ஓட்டுனராக பணிபுரியும் திரு. B. சத்தியமூர்த்தி ஓட்டுனர் தனது **4.10.2019**ம் தேதிய விண்ணப்பத்தில் தெரிவித்துள்ளார். | **தீர்மான எண்.692**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| வ. எண். | பழுதுகள் விபரம் |
|---|---|
| 1. | கம்ளீட் ஆயில் சர்வீஸ் |
| 2. | கம்ளீட் டிங்கரிங் ஒர்க்ஸ் |
| 3. | ஏலக்ரிக்கல் ஒர்க்ஸ் |
| 4. | பட்டை ரீகமரிங் பின்புஷ் மாற்றுதல் |
| 5. | நான்கு சைடு சாக்கப்சர் , ரீகன்டீசன் செய்தல் |
| 6. | கிளர்ச்சி பிளேட் மற்றும் கவர் அசெம்ளி மாற்றுதல் |
| 7. | நான்கு வீல் கிரீஸ் பேக்கிங் மற்றும் லையனிங் |
| 8. | ஹைட்ராலிக் ஆயில் பாக்ஸ் புதிதாக செய்தல் |
| 9. | ஹைட்ராலிக் ஜாக்கி சர்வீஸ் செய்தல் |
| 10. | கம்ளீட் பெயின்டிங் மற்றும் எழுத்து வேலை |
| 11. | ரேடியேட்டர் சர்வீஸ் |
| 12. | கிளர்ச்சி மாஸ் சிலிண்டர் பிட் மேல் மற்றும் கீழ் பகுதி |
| 13. | சீட் கம்ளீட் மாற்றுதல் |

மேற்கண்டவாறு பழுது நீக்கம் செய்து தகுதிச்சான்று புதுப்பிக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.**95000/–**க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u> மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.3843/2019/எச்1**

| | | |
|---|---|---|
| | மயிலாடுதுறை நகராட்சி<br>**2019–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 18 –ஆம் தேதி புதன் கிழமை**<br>**மாலை 3.30 மணிக்கு நடைபெற்ற அவசரக்கூட்ட நடவடிக்கைகள்.**<br>**முன்னிலை:– திரு. சோ. புவனேஸ்வரன் (எ) அண்ணாமலை.,**<br>**தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையர்**<br>மயிலாடுதுறை நகராட்சி | |
| மன்ற கூட்டம்<br>நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள் | தீர்மானம் |

| | | |
|---|---|---|
| **18.12.2019** | **1)** மயிலாடுதுறை நகராட்சி பாதாள சாக்கடை திட்டப்பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர், நாகப்பட்டினம் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் அறிவுறுத்தலின்படி, கண்காணிப்பு பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை-28, தலைமை பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை-05 ஆகியோர்களின் தலைமையில் பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பு பணி குறித்து 10.12.2019 அன்று கூட்டாக கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.<br><br>அதில் தரங்கம்பாடி சாலையில் பாதாள சாக்கடை குழாய் அடிக்கடி பழுது ஏற்பட்டு சாலை உள்வாங்கி வாகன ஒட்டிகளுக்கும், பொதுமக்களுக்கும் மிகவும் சிரமநிலை ஏற்பட்டு வருவதால், தற்காலிகமாக தேவையான நீளத்திற்கு நீர் உந்து குழாய் (PVC) மூலம் அமைத்து மின்மோட்டார்கள் பொருத்தி தற்காலிக மின்இணைப்பு புதியதாக பெற்று Pumping செய்ய அறிவுறுத்தப்பட்டது. இதன் மூலம் பழுது ஏற்பட்டுள்ள பகுதிகளில் கழிவுநீரை வெளியேற்ற முடியும். அதன்படி மேற்கண்ட பணிக்கு ரூ.6.75 இலட்சம் ஆகும். இதனை இந்நகராட்சியின் பாதாள சாக்கடை திட்டம் 2019-20 இருந்து பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: 1. அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br><br>ந.க.எண். 7724/99/இ1 | **தீர்மான எண்–675**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| **18.12.2019** | **2)** மயிலாடுதுறை நகராட்சியில் பாதாள சாக்கடை திட்ட பணிகள் நிறைவடைந்து 2008-ம் ஆண்டு முதல் மக்கள் பயன்பாட்டில் உள்ளது. இத்திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பராமரிப்பு காலம் முடிந்து நகராட்சி மூலம் பராமரிப்பு செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டம் கடந்த பதினொரு ஆண்டுகளாக மக்கள் பயன்பாட்டில் உள்ளது. இத்திட்டத்தின் கீழ் நகரின் அனைத்து கழிவுநீர் உந்து நிலையங்களிலிருந்து வரும் கழிவுநீர் நான்காம் எண் கழிவுநீர் உந்து நிலையத்திலிருந்து எட்டாம் எண் கழிவுநீர் உந்து நிலையத்திற்கு சென்றடைகிறது. இதன் குழாய்கள் 6.00 மீட்டர் ஆழத்திற்கு கீழ் பதிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட குழாய்களில் கடந்த ஒரு வருட காலமாக பழுதுகள் ஏற்பட்டு ஆங்காங்கே கழிவுநீர் செல்லாமல் அடைப்பு ஏற்படுவதுடன் மேற்கண்ட சாலை உள்வாங்கி போக்குவரத்திற்கு இடையூறு ஏற்பட்டு வருகிறது.<br><br>இதனை தவிர்க்க கழிவுநீர் உந்து நிலையம் II,III,V,VI மற்றும் IV-ல் இருந்து சேகரிக்கப்படும் கழிவுநீர் Gravity line-ல் செல்லாமல் புதிய கழிவுநீர் உந்து குழாய்கள் மூலம் PS.IV முதல் PS.VIII அனுப்ப திட்டமிடப்பட்டுள்ளது.<br><br>இதன் மூலம் மொத்த கழிவுநீரும் செல்லும் பாதையான தரங்கம்பாடி சாலையில் உள்ள குழாய்கள் அடிக்கடி சேதமடைவதை தவிர்க்கமுடியும். மேலும் இதுகுறித்து கண்காணிப்பு பொறியாளர் நகராட்சி நிர்வாக இயக்குநர்அலுவலகம்,சென்னை-28 அவர்கள் மற்றும் கூடுதல் தலைமை பொறியாளர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை-05 அவர்கள் கூட்டாக 10.12.2019 அன்று ஆய்வு செய்து இப்பணியை மேற்கொள்ள பரிந்துரை செய்துள்ளனர். இதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.275.00 இலட்சம் ஆகும். இப்பணியினை மேற்கொள்ள நகராட்சியில் போதிய நிதி ஆதாரம் இல்லாத காரணத்தினால் மேற்கண்ட தொகை ரூ.275.00 இலட்சத்தினை அரசிடமிருந்து முழுமானியமாக வழங்க வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை-28 அவர்களுக்கு விரிவான திட்ட அறிக்கையின் கருத்துருவினை சமர்பித்து அனுமதி பெற மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: 1. அனுமதிக்கலாம்.<br>2. மேற்கண்ட பணியின் அவசியம் குறித்து மேற்கண்ட மதிப்பீடு தொகையினை அரசின் ஏதேனும் திட்டத்தின் மூலம் முழுமானியமாக பெறுவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை-28 அவர்களுக்கு கருத்துரு சமர்பிக்கலாம்.<br><br>ந.க.எண். 7724/99/இ1 | **தீர்மான எண்–676**<br>**அனுமதிக்கப்பட்டது** |